# இஸ்லாமியத் திருமணமும் நலவாழ்வும்

**M.Y.M. Suheera[70] & M.C.S. Shathifa[71]**

Correspondence: suheesafeek@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஒரு முன்மாதிரிமிக்க குடும்பஉருவாக்கத்தின் அத்திவாரம் திருமணமாகும். இக்குடும்பங்களின் நலவாழ்வினை அடிப்படையாகக் கொண்டே இத்திருமணத்திற்கான அடிப்படையான விதிமுறைகளை இஸ்லாம் பரிந்துரைத்துள்ளது. இத்தகைய திருமணத்தில் நலவாழ்வு ஏற்படவேண்டும் என்பதற்காக மணக்கொடை வழங்கித் திருமணத்தைப் புரிவதனையே இஸ்லாம் அங்கீகரிக்கின்றது. மாறாக இலங்கையில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் நடைபெறுகின்ற திருமணங்களில் மணக்கொடைக்குப் பதிலாக சீதனம் பெற்றுத் திருமணம் செய்யும் நடைமுறையே பெரும்பாலும் காணப்படுகின்றது. இருந்தபோதிலும் ஆங்காங்கே ஒருசிலர் இஸ்லாமிய திருமண விதிகளைப் பேணியும் தமது வாழ்வை அமைத்துக் கொள்கின்றார்கள். இந்தவகையில் இவ்வாய்வானது அம்பாறை மாவட்டத்திலுள்ள இஸ்லாமிய வரையறைகளைப் பேணித் திருமணம் செய்தவர்களின் நலவாழ்வு பற்றி ஆராய முயலுகின்றது. பண்புசார் முறையில் அமைந்த இவ்வாய்வானது சம்மாந்துறை, ஒலுவில், நிந்தவூர் ஆகிய பிரதேசங்களிலிருந்து 25 குடும்பங்களை மாதிரியாகத் தெரிவு செய்து ஆய்வுக்குட்படுத்தியுள்ளது. இவ்வாய்வுக்கான முதல்நிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ள நேர்காணல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளானது, ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், நூல்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. இந்தவகையில் இப்பிரதேச மக்களில் இஸ்லாமிய வரையறைகளைப் பேணித் திருமணம் புரிந்தோர்களின் நலவாழ்வில் திருப்தியளிக்கக் கூடிய நிலைமைகள் மிகவும் கடினமான முயற்சிகளால் அடைந்துகொள்ளப்படுவதாக இருக்கின்றது. இதற்குக் குடும்பத்தில் காணப்படுகின்ற பொருளாதார ஆதரவின்மை, முறையானசொத்துப் பங்கீடின்மை ஆகிய காரணங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இருப்பினும், பொருளாதார ரீதியாக குடும்ப ஆதரவும்,பலமும் கொண்டிருந்தவர்களிடையே திருப்திகரமான நலவாழ்வு நிலைமைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்படுகின்றது. இதற்கேற்ப அவர்களின் நலவாழ்க்கை அமைந்துள்ளமை ஆய்வில் வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே இவ்வாய்வானது இஸ்லாமிய வரையறையில், திருமணம் புரிந்து வாழும் குடும்பங்களின் நலவாழ்வில் பொருளாதார மகிழ்ச்சி என்பது மிகவும் அடிப்படையாக அமைகின்றது என்பதனையும் வெளிப்படுத்துகின்றது. எனவே, சமயம் சார்ந்த நிறுவனங்கள் இத்தகைய குடும்பங்களுக்கு பொருளாதாரப் பங்களிப்பை வழங்கக் கூடியவகையில் தந்திரோபாயத் திட்டங்களை வகுத்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தல் போன்றனவற்றை முன்னெடுக்க வேண்டும். அத்துடன் ,ஒரு சமய நிறுவனம் சமூக நிறுவனம் என்ற வகையில், முறையான சொத்துப் பங்கீட்டை சமூகத்தில் நடைமுறைப்படுத்துகின்ற வகையில் செயற்படல் வேண்டும் என்பவைகளைப் பிரதானமான விதந்துரைப்புக்களாக இவ்வாய்வு முன்வைக்கின்றது.

**பிரதான சொற்கள்:** திருமணம், மகிழ்ச்சியான பொருளாதாரம், நலவாழ்வு, சமூக அங்கீகாரம்

## அறிமுகம்

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் திருமணம் ஒரு வணக்கமாகக் கருதப்படுகின்றது. இத்தகைய திருமணத்தின் சாரமே ‘ஆண் ,பெண் இருவருக்குமிடையில் மகிழ்ச்சியையும், பரஸ்பரத்தையும்ஏற்படுத்தி, சிறந்த எதிர்கால சமூகத்தை உருவாக்குவதாக இருக்கின்றது[72]. எனவேதான் இவ்வாழ்வினை ஆரம்பிக்கும் ஒரு ஆண், இஸ்லாமியத் திருமண விதிகளில் மிகப் பிரதானமான “மஹர்” எனப்படும் திருமணக் கொடை அல்லது அன்பளிப்பினை மிக கண்ணியமான முறையில் பெண்ணுக்கு வழங்கும்படி இஸ்லாம் பணித்துள்ளது[73]. மஹர் என்பது கணவன் திருமணத்தின் போது மனைவிக்கு வழங்கும் அன்பளிப்பாகும். இவ்வன்பளிப்புஒரு பெண்ணின் பெறுமான விலையல்ல, மாறாக அது திருமணத்தின்போது

[70] Department of Arabic, South Eastern University of Sri Lanka.
[71] Department of Arabic, South Eastern University of Sri Lanka.
[72] Al- Badawi, Marriage in Islam, 2005
[73] அல்குர்ஆன்,சூறதுன் நிஸா:04

மனைவி கணவனிடமிருந்து பெறுகின்ற உரிமையாகும்[74]. இஸ்லாம் இதனூடாக பெண்ணுக்கான பொருளாதார வலுவூட்டல் வழங்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இஸ்லாமிய வரலாற்றினை நோக்கும் போது நபி(ஸல்) அவர்களதும் அவர்களது தோழர்களினதும் வாழ்வில் பெண்களுடைய மஹர் தொடர்பான உரிமைகள் வழங்கப்பட்டதனையும், மகிழ்ச்சிகரமான பொருளாதார, சமூக நிலைமையில் வாழ்ந்தமையையும் தாராளமாக் காணமுடியும்.[75]இவை இஸ்லாத்தின் கடமையான மஹரின் பெறுமானத்தையும் அதனால் ஏற்படுகின்ற மகிழ்ச்சிகரமான குடும்பத்தையும் விளக்கிக் காட்டுகின்றன.

ஆயினும் இதற்கு மாற்றமாக இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்தில் இம்மணக் கொடை இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற முக்கியத்துவத்தினைப் பெறவில்லை. இன்று நடைமுறையிலுள்ள திருமணங்களில் பெரும்பாலும் பெண் வீட்டாரிடமிருந்து சீதனத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். அதே வேளை இத்தகைய திருமணங்களில்,கடமை கழிப்புக்காக மஹர் வழங்கப்படும் நடைமுறையேகாணப்படுகின்றது. இஸ்லாம் 'ஒற்றைப்பட நடைபெறும் அமைப்பினை விரும்பும் மார்க்கம்' என்பதனை மட்டும் கருத்திற் கொண்டு, அழகிய முறையில் வழங்குமாறு பணித்த மஹரினை ஆயிரத்தி ஒரு ருபா, பத்தாயிரத்து ஒரு ருபா என்ற வகையில் வழங்கும் நடைமுறையே இன்று பின்பற்றப்பட்டு வருகின்றது. இது மணப்பெண்ணுக்குப் பொருளாதார வலுவூட்டலை வழங்கும் ஒன்றாக இல்லை[76].

மேலும்,சீதனம் தொடர்பான எதுவிதமான சொற்பதங்களும் அறபு மொழிப்பிரயோகத்திலோ,ஷரீஆவிலோ(இஸ்லாமிய சட்டஆதாரங்கள்)இல்லை. திருமணத்தின்போது எவ்விதமான பொருளாதாரச் சுமைகளையும் இஸ்லாம் பெண் தரப்பின் மீது கடமையாக்கவில்லை என்பது இதன்மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. ஆனால் இன்று சீதனம் என்பது முஸ்லிம் சமூகத்தில் பாரம்பரியமாகவும், தவிர்க்க முடியாமலும் பின்பற்றப்பட்டு வருகின்ற ஒரு சடங்காகக் காணப்படுகின்றது. சீதனம் வழங்கித் திருமணம் புரிகின்ற முறைமையானது இப்பிரதேச முஸ்லிம்களின் திருமணநடைமுறைகளில் பிரிக்கமுடியாதவகையில் செல்வாக்குச் செலுத்திவருகின்றது[77]. பெறுமதிகளில் அசையும் சொத்துக்களாகவும், அசையாச் சொத்துக்களாகவும் மணமகன் தரப்பால் மணமகள் தரப்பினரிடம் அதிகாரம் செலுத்திப் பெற்றுக் கொள்கின்ற வழமைகளும் காணப்படுகின்றன[78]. இதன்மூலம் ஆண்களின் அந்தஸ்த்தினைத் தீர்மானிக்கும், உயர்த்திக் காட்டும் அளவுகோலாகவும் இது மாறியுள்ளது.

வரலாற்று ரீதியாக சீதனத்தின் பரிமாணத்தை நோக்கும் போது,பெண்பிள்ளைகளைத் திருமணம் முடித்துக்கொடுக்கும்போது, தமது பிள்ளைகள் சந்தோஷமாக வாழ்வதற்காகவும், பெண்பிள்ளைகளின் குடும்பரீதியான அந்தஸ்தை சமுதாயத்திற்கு வெளிப்படுத்திக் காட்டுவதற்காகவும் பெண்மகளின் பெற்றோர் அன்பளிப்புக்களை வழங்கிவந்தனர். இத்தகைய பண்பாட்டு அம்சங்களை அக்காலத்திலிருந்தே முஸ்லிம்களும் பின்பற்றிவந்தனர[79]. காலப்போக்கில் இப்பழக்கவழக்கங்கள் மருவி, பெண்பிள்ளைகளுக்குத் திருமணம் என்பது சீதனம் வழங்காமல் நடப்பது சாத்தியமற்றதாகக் காணப்படும் நிலை பெரும்பாலான குடும்பங்களில் உருவாகியுள்ளது.இதனால், பெண் பிள்ளை பிறந்துவிட்டால்,

---

[74]ஹஸனாஹ், எஸ்.ஐ. (2015). **இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் மற்றும் சமநீதி.**, இலங்கை: அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம். ப.09

[75]முஸ்லிம்,1426

[76]மேலது.

[77]செய்னுதீன்.எஸ்.பரீத், (1998) ***சீதனம்***.ஹெம்மாதகம: அல்புர்கான் வெளியீட்டுப் பணியகம். ப.17

[78]மேலது.

[79]அபுல் ஹஸன்.எம்.கே.ஈ. (1971) **இஸ்லாத்தில் *சீதனம்* (கைக்கூலி) அனுமதிக்கப்பட்டதா?.** கொழும்பு. ப.ப.4-6

பிறந்ததிலிருந்தே சீதனமாக வழங்கத் தேவையான அனைத்தையும் தேடவும்,உழைக்கவும் வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்குப் பெற்றோர்கள் தள்ளப்படு வருகின்றார்கள்[80].

எனவே சீதனம் என்பது சமூகத்தின் அடிக்கட்டுமானங்களில் பலமான இடத்தைப் பிடித்துள்ளதையும், கல்வி, பொருளாதாரம், சமயம், குடும்பம் என அனைத்து மேல்கட்டுமானங்களில் பாரியளவிலான விளைவுகளை வெளிப்படுத்தி வருகின்றமையையும் விளங்கிக் கொள்ள முடியும். கிழக்கு மாகாண முஸ்லிம் குடும்பங்களிடையே ஒரு ஆணுக்கு வழங்கப்படும் சீதனமானது, பல தராதரங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக அரசதுறைகளில் உயர் சேவையாற்றுவோர் (வைத்தியர், பொறியியலாளர், உயர் அதிகாரிகள்,விரிவுரையாளர்கள்), மத்திய தர சம்பளத்தில் சேவையாற்றுவோர் (ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்), மத்திய கிழக்கில் வேலைபுரிபவர்கள், சாதாரண கூலிவேலை (தச்சன்,மேசன்) போன்றவர்களின் வருமானத்திற்கும் அந்தஸ்த்திற்கும் ஏற்ப சீதனம் வழங்கப்படுகின்றது(சலீம்,2016). இதனால் பெண் தரப்புக் குடும்பங்கள் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும்பெரும் சுமையைச் சுமந்து வருகின்றன.இது இஸ்லாமிய விதிமுறைகளுக்கு மாற்றமான ஒன்றாகும்[81]. இதனால்தான் இந்நடைமுறைகளைப் பின்பற்றுவதனால் கற்பனை செய்ய முடியாத பல குடும்பப் பிரச்சினைகளைச் சமூகம் எதிர்கொண்டு வருகின்றது.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் திருமணம் என்பது மானுடத்தின் அன்பு, பரஸ்பரப் புரிந்துணர்வு(metualunderstanding),பாசம் (affection), அமைதி(tranquility) என்பவைகளைக் கற்றுக் கொள்ள வழிவகை செய்யும் ஒரு நிகழ்வாகும் .“நீங்கள் மன அமைதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்கள் மனைவியரை உங்களுக்காகப் படைத்தான். உங்களுக்கிடையில் அருள்சார்ந்த உள்ளன்பையும் ஏற்படுத்தினான்[82].இத்தகைய பெறுமானத்தைக் கொண்ட திருமணம் இஸ்லாமிய வழியில் அமையும் போது ஒரு சிறந்த தலைமுறையினை உருவாக்க முடியும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. எனவே, இஸ்லாமிய அடிப்படையிலான திருமணவாழ்வை தம்பதியினர் அமைதியாக மேற்கொள்ளும் போதே இத்தகைய பண்புகள் உருவாகுவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்பதனை மேற்குறிப்பிடும் பதாவியின் கருத்து முன்வைக்கின்றது.

இத்தகைய விதிகளின் அடிப்படையில் திருமணம் புரிந்து வாழ்வதற்குப் பலர் விருப்பமுள்ளவர்களாக இருக்கின்றனர். ஆயினும், இத்தகைய திருமணங்களுக்கு குடும்பத்தின் எதிர்ப்பு, பொருளாதார பலமின்மை, சமூக கௌரவம் ஆகியன தடைகளாக உள்ளமையால் அவ்விருப்பங்களைக் கைவிட்டுள்ளனர[83]. அதனையும் தாண்டி பல சிக்கல்களை எதிர்கொண்டு இத்தகைய வாழ்வை முன்னெடுப்பவர்களும் சமூகத்தில் உள்ளனர். இவர்கள் தமது சமூகத்தின் பாரம்பரியங்களை விட்டும் தூரமாகி, இஸ்லாமிய விதிமுறைகளின் படி திருமணங்கள் புரிந்து கொண்டமையால் தமது வாழ்வில் பல்வேறு தாக்கங்களை எதிர்கொண்டு வருகின்றனர[84].

சீதனம் வழங்கித் திருமணம் புரிவதனை இஸ்லாம் முற்றாகத் தடுத்துள்ளது. இஸ்லாமியநெறிகளுக்குஅப்பால் சீதனம் பெற்றுத் திருமணம் புரியும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதனால் பல்வேறு தனிப்பட்ட, குடும்பரீதியான, உறவுரீதியான பிரச்சினைகள் உருவாகி வருவதனை பல அறிக்கைகள் வெளிப்படுத்திவருகின்றன.அத்துடன் சீதனநடைமுறைகள்இஸ்லாமியநெறிமுறைகளுக்குஅப்பாற்பட்டவிடயங்களைக்

---

[80]மேலது

[81]Janaki, R. (1977). **Marriage based Economy.** ***Economic review*** , pp.3-14.

[82]அல் குர்ஆன், 30:21

[83]Thaahir. (2016, 08 05). Marriage in Islam.

[84]Salma.M.I.M. (2016, 08 21). marriage inMuslim Society.

கடைப்பிடிக்கசமூகஉறுப்பினர்களைத் திணித்துள்ளது[85]. உதாரணமாக,பெண்பிள்ளைகளுக்குச் சீதனம் வழங்கவேண்டியதேவைகாரணமாக,சொத்துக்கள் பிழையானமுறையில் பங்கீடுசெய்யப்படுதல்,ஆடம்பரமான வீடமைப்புக்கள், ஆண்களின் மார்க்க விடயங்களைவிட, பொருளாதாரம் மற்றும் தொழில்களை கவனித்தல்,மாப்பிள்ளையைப் போட்டிபோட்டுபெற்றுக்கொளளல் பெண்களின் வெளிநாட்டுவேலைவாய்ப்பு, அதிகம் சம்பாதிப்பதற்காக குடும்பங்களைவிட்டும் பிரிந்து ஆண் சகோதரர்கள் வெளிநாடுகளைநோக்கிநகர்தல்,வட்டி,மோசடி,பொய் பேசுதல், வியாபாரத்தில் மோசடிகள் , பதுக்கல்கள் எனப் பலவிடயங்கள் சீதனத்தைமையப்படுத்தி இடம்பெற்றுவருகின்றன[86].இத்தகைய பிரச்சினைகள் சமூகத்தில் பொருளாதாரம், குடும்ப தனிப்பட்ட மனிதவாழ்வு, சமயம் என்பவைகளில் பாரியளவில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

மறுபுறம் சீதனத்துடன் தொடர்பான பாகுபாடுகள்,சொத்துச் சண்டைகள், இரத்த உறவுகளைத் துண்டித்தல், பெற்றோரை விரட்டியடித்தல் எனப் பல்வகையான குடும்பச் சிக்கல்களையும் அதிகரிக்கச் செய்துவருகின்றது[87].

**ஆய்வுப் பிரச்சினை**

சீதனநடைமுறைகள் முஸ்லிம் சமூகத்தில் பெரும்பரப்பில் வெவ்வேறு வடிவங்களில் பின்பற்றப்பட்டுவரும் அதேவேளை,அண்மைக்காலமாக, இஸ்லாமியநெறிகளைப் பின்பற்றி,திருமணம் புரிந்தும் வருகின்ற போக்கும் அதிகரித்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. இவர்கள் சமுதாயத்தில் தத்தமது நாளாந்தச் செயற்பாடுகளில் ஏனையவர்களைப் போலஈடுபட்டும் வருகின்றனர்.

இவ்வாறு ஒரு பகுதியினர் மேற்கொண்டு வருகின்ற திருமணங்களானது குடும்ப ரீதியாக பெரும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இடம்பெற்று வருகின்றன. அதேவேளை,சில குடும்பங்கள் இத்தகைய திருமணத்திற்கு ஆதரவு வழங்கியும் வருகின்றன. இவ்வாறு சீதனம் பெறாமல் இஸ்லாமிய திருமண விதிப்படி மணம் புரிந்தோர்கள் தமது வாழ்வை முன்னெடுத்துச் செல்லும்போது பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றமையை சமூகப் புலத்தில் ஆய்வாளர்களால் அவதானிக்க முடிகின்றது. அதேவேளை இத்தகைய குடும்பங்களின் சமூக நிலைமைகள் பற்றி ஊடகங்கள் பல்வேறு பதிவுகளை முன்வைத்து வருகின்றது.இருந்த போதிலும், இது தொடர்பாக ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை. அதேபோல, இத்தகைய குடும்பங்களின் சமூகப் பொருளாதார நிலைமைகள் பற்றிய விடயங்கள் கலந்தாய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய விடயமாக இருப்பினும், இத்தகைய விடயங்கள் அறிவுப் புலத்தில் மிகவும் குறைவாகவே கவனம்செலுத்தப்பட்டுள்தாக அமைந்துள்ளது. எனவே இத்தகைய குடும்பங்கள் சமூக,பொருளாதார ரீதியாகஎத்தகையநிலைமைகளில் வாழ்கின்றனர் என்பனவற்றையும் அடையாளம் காணவேண்டிய தேவை அவசியமானதாக இருக்கின்றது.

பெரும்பாலான ஆய்வுகளும், நூல்களும் சீதனம் பெறுதல், அதனால் ஏற்படுகின்ற விளைவுகள் தொடர்பான விடயங்களையே அதிகளவில் முன்வைத்து வருகின்றன. ஆனால் சீதனம் பெறாமல் மணமகன் மணப் பெண்ணைஇஸ்லாமிய விதிமுறைகளின் அடிப்படையில் மணம்புரிந்து வாழ்கின்றவர்கள் பற்றியோ அவர்களது குடும்ப நிலைமைகள் பற்றியோ எமது சமூகப் புலத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

---

[85]Rinosa.A. (2016). Muslim Marrage in Ampara district. *3rd International Symposiyum.* Oluvil: South Eastern University Of Srilanka.

[86]Naseeha.A.l. (2014). *Dowry and social effects.*Aunal Symposium,Faculty of Arts, University of Colombo.

[87]Hassim, I. (2016),*Marriage in Muslim Society*, Thinaharan.

எனவே,இவ்வாய்வு மிக அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. ஏனெனில் இஸ்லாமிய விதிமுறைகளைப் பின்பற்றி வாழும் இத்தரப்பினரின் வாழ்வியல் நிலைகள் வெளிப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இத்தகைய வாழ்க்கையினை மேற்கொள்வோருக்கு சமூகத்தில் ஒரு வித மதிப்பும் மறுபுறம் ஏளனமும் இருக்கின்றமையை வெளிப்படையாகக் காண முடிகின்றது. இருப்பினும் அது எவ்வளவு தூரம் உண்மைத் தன்மையானது என்பதனை விஞ்ஞான ஆய்வுவழி கண்டுபிடிக்கவேண்டியுள்ளது. அப்போதுதான் சீதனத்தின் விளைவுகளையும், இஸ்லாமியத்திருமணத்தின் விளைவுகளையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். அத்துடன் இஸ்லாமியசட்டத்தின் பெறுமதியையும் நடைமுறையில் அளவீடுசெய்யவும் முடியும். மேற்குறித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் இலக்கு**

இஸ்லாமிய விதிமுறைகளைப் பின்பற்றித் திருமணம் புரிந்துள்ள குடும்பங்களின் நலவாழ்வு தொடர்பாகக் கண்டறிதல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்பு ரீதியான அணுகுமுறையினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான தரவுகள் ஆழமான கலந்துரையாடல்கள(Indepth-Interview) மற்றும் நேர்காணல் (informative interview) என்பவற்றூடாகப்பெறப்பட்டன.

இவ்வாய்வானது,'இஸ்லாமிய விதிமுறைகளின் அடிப்படையில் திருமணம் செய்து வாழ்கின்ற குடும்பங்கள்' என்கின்ற வரையறையின் அடிப்படையில், இக்குடும்பங்களிலிருந்து மாதிரியாக 25 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன. இம்மாதிரியானது,அம்பாரை மாவட்டத்திலுள்ள ஒலுவில், நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய 03 கிராமங்களில் இத்தகைய திருமணங்கள் புரிந்து வாழ்கின்றவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளன. இக்குடும்பங்களின் நலவாழ்வில் பொருளாதாரம் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுவதனால், சிறு தொழில் முயற்சியான்மையில் ஈடுபடுகின்ற, சிறு கடை வியாபாரத்தில்ஈடுபடுகின்ற, அரச தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய பொருளாதாரப் பின்புலங்களைக் கொண்டுள்ள குடும்பங்கள் இதற்காக முதன்நிலைப்படுத்தப்படுகின்றன. இப்பின்புலம் தழுவியே household தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.இவ்வாய்வினைப் பகுப்பாய்வு செய்ய Themetic analysis முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வு வரையறை:**

இவ்வாய்வுத் தலைப்பு பரந்த உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது. எனவே, ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நலவாழ்வானது பொருளாதார மகிழ்ச்சி, சமூக வாழ்வில் திருப்தி நிலை ஆகிய பிரதான இரண்டு மாறிகளின் ஊடாக அளவீடு செய்யப்படுகின்றது. சமூக வாழ்வில் திருப்தி நிலையினை அளவீடு செய்ய,குடும்ப அங்கீகாரம், சமூக அடையாளம் ஆகியனவும்,பொருளாதார மகிழ்ச்சியை அளவீடு செய்ய, தொழில், வருமானம், என்பவையும் மாறிகளாகஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

**இலக்கியமீளாய்வு:**

நலவாழ்வுக்கும் குடும்பத்திற்கும் இடையிலான தொடர்புகள்பற்றிப் பல்வேறு இலக்கியமீளாய்வுகள் காணப்பட்டாலும், இஸ்லாமிய முறையில் அமைந்த குடும்பங்களின் நலவாழ்வு தொடர்பான ஆய்வுகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. சமூக உளவியல் அணுகுமுறையில், நலவாழ்வு என்பதுமகிழ்ச்சியான பொருளாதாரம், வாழ்க்கையில் ஏற்படுகின்ற திருப்தி நிலை சந்தோசம், சமூகம் ஒருவருக்கு வழங்குகின்ற

அங்கீகாரங்கள் போன்ற பல கூறுகளை உள்ளடக்கிய அம்சமாகப் பார்க்கப்படுகின்றது.[88] இருந்தாலும் பொருளாதாரம் சார்ந்த அளவீடுகளானது நலவாழ்வு என்பதனை பொருள்சார் கூறுகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கின்றது. இத்தகைய அளவீட்டிற்கு அப்பால்,Kahnema என்பவர், தனிப்பட்ட மனிதனின் அனுபவங்களின் வழியான அளவும், அது எப்படி அவர்களது வாழ்வில் பயன்படுத்தப்பட்டகின்றது என்பதனைக் கொண்டே நலவாழ்வு அளவிடப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றார்[89].

மேலும் பல்துறை அணுகுமுறையானது இதற்கு மேலதிகமாக நிலையான மற்றும் சார்பான வருமானங்கள், அவை மக்களின் தனிப்பட்ட மற்றும் சமூக உலகில் எந்தளவு சந்தோசத்தை ஏற்படுத்துகின்றது, அவர்களின் திறன்களைக் எப்படிக் கட்டுப்படுத்துகின்றது, அவர்களின் சமூகத் தொடர்புகள், அத்தகைய தொடர்புகளில் எவ்வாறு மக்கள் தங்களை உணர்கின்றார்கள்,அவற்றின் அடிப்படையில் எவ்வாறு வாழ்கின்றார்கள், எப்படியான சிக்கல்களை எதிர்கொள்கின்றார்கள் என்பவைகளை அளவிடுவதன் மூலம் நலவாழ்வை அளவிடமுடியும் எனக் குறிப்பிடுகின்றது[90]. எனவே மேற்குறிப்பிட்ட விளக்கங்கள் நலவாழ்வு என்பதனை சமூக, உளவியல் கண்ணோட்டங்களில் நலவாழ்வில் பொருளாதார சந்தோசம், திறன், தனிப்பட்ட மனித சந்தோசங்களும், அதனை உணரும் அளவு, வருமானம், சமூக மதிப்பு, சமூக அங்கீகாரம் என பல்வேறு மாறிகளை உள்ளடக்கியதாக இருப்பதனை வெளிப்படுத்துகின்றது.மேலும் குறியீட்டு இடைவினையாளர்கள் நலவாழ்வில் சமூகமட்டத்தில் குறிப்பாக குடும்ப நிலையில் காணப்படுகின்ற இடைவினைகளின் வடிவங்களும் அளவும் செல்வாக்குச் செலுத்தவதாகக் குறிப்பிடுகின்றனர[91]. மேலும் நலவாழ்வு என்பது பொருளாதார ,சூழலியல் செல்வாக்கிற்கும் உட்படுகின்றது. குறிப்பாக பொருள்சாராத காரணிகள் அதிகளவில் நலவாழ்வில் செல்வாக்குச் செலுத்துவதாக மெக் அலிஸ்டர் குறிப்பிடுகின்றார். மனிதர்களிடையே உருவாகின்ற தனிப்பட்ட தொடர்புகளும் உறவுகளும்[92], சமூக, குழும உறவுகளும் [93], தொழிலும் வருமானமும் [94], செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே இங்கு,நலவாழ்வில் பல்வேறுபட்ட காரணிகள் பல வடிவங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

அதே போல, சமூதாயத்தில் ஒருவருக்குக் கிடைக்கின்ற அந்தஸ்தும்,அங்கீகாரமும் இரண்டு வழிகளில் அமைகின்றது. ஒன்று ஒரு குடும்பத்தில் பிறப்பதன் மூலம் வந்தடையும் அந்தஸ்த்தாகக் கிடைக்கின்றது (Ascribs status). இரண்டாவது ஒருவர் தனது முயற்சி மூலம் அடைந்து கொள்ளும் தகுதியாக இருக்கின்றது.இது அடைந்து கொள்ளும் அந்தஸ்த்தாகக் காணப்படுகின்றது. திருமணத்தின் மூலமாகப் பெறப்படும் அந்தஸ்த்து அடைந்து கொள்ளும் அந்தஸ்த்தாகக் கருதப்படுகின்றது[95].இவ்விரண்டு அங்கீகாரமும் ஒருவருக்கு மிக முக்கியமானதாக அமைகின்றது. சமூக உறுப்பினர் என்றவகையில் இது ஒருவரின் தகுதியை அளவிட உதவுகின்றது[96].இது அவர்களின் சமூக, தனிப்பட்டகுடும்ப

---

[88]Easter Lins R.A., (2008).*Life cycle happiness and Its source*,Oxford :Oxford University pres.
[89]Khanema.a, et.al., (2006), development in the meshement of wellbeing, journal of economic press
[90]Knight and Gunatilaka,(2007), great expectation? The subjective wellbeing of rural community, Department of Economy, Oxford :Oxford University pres.
[91]Sorokin,(2000), Introduction to sociology, Penguin press
[92]Helliwell J. and Putnam R., (2004).The Social Context of Wellbeing. In Huppert, F, Baylis, N and B Keverne (eds.) (2005) The Science of Wellbeing. Oxford: Oxford University Press.

[93] Keyes, C. (1998). Social Wellbeing.Social Psychology Quarterly.V 61, no 2.

[94] Layard, R. (2005). Happiness: lessons from a new science. London: Allen Lane
[95]மேலது
[96]Helean.Z. (2014). *self identity : Marriage and Widohood. Sociological studies* , 407-418.

உறவுகளில் தாக்கம் செலுத்துகின்றது[97]. தனிநபருக்கான சமூக அடையாளமானது அவர்களைச் சுற்றியுள்ள குடும்பம், நண்பர்கள், அயலவர்கள், இரண்டாம் நிலைக் குழுக்களுடனான இடைவினைகள் என்பவற்றின் வழியாகப் பெறப்படுகின்றது. தனிநபரின் சமூகமே அவனுக்கான அடையாளத்தை வழங்கும் கண்ணாடியாகும[98]. ஒருவரின் சமூக அடையாளம் சாதகமாக அமையும் போது அவர் சுயமுன்னேற்றத்தை இலகுவாக அடைந்து கொள்வார். பாதகமாக அமையும்போது அவரது சுயம் பாதிப்படையும[99]. குடும்பவாழ்வில் ஏற்படுகின்ற மகிழ்ச்சியான சுழ்நிலைகள் சுயம் தொடர்பான திருப்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

மேலும் குடும்பத்தின் நலவாழ்வில் சமூகத் தொடர்புகள் (social connection), சமூகச் செல்வாக்கு (social influence) ஆகியன பெருமளவில் செல்வாக்குச் செலுத்துகின்றது[100].இவ்வகையில் குடும்பத்தில் காணப்படுகின்ற ஏனையவர்களின்தொடர்பாடல்களானது சாதகமான, பாதகமான தாக்கங்களை நலவாழ்வில் கொண்டுவருவதாக Hartwell மற்றும் ஏனையோரும் தங்களின் களஆய்வின் வழி குறிப்பிடுகின்றனர[101].

மேலும் திருமணமான குடும்பங்களில் இவர்களைச் சுற்றியுள்ள உறவுகளின் தரமானது சமூக ஆதரவு(social support), சமூகப் பலம்(Social strain) அவர்களின் உடல், உள, பொருளாதார ரீதியான நலவாழ்வில் தாக்கம் செலுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக, மிகவும் சிக்கலான சூழ்நிலைகளில் திருமணம் புரிந்த குடும்பங்களின் நலவாழ்வில் மனஅழுத்த வெளிப்பாடுகள அதிகமாக நிலவுவதாகவும் இதனால் அவர்களின் நலவாழ்வு பாதிப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது[102]. இருந்த போதிலும், குடும்பத்தில் நெருக்கமான உறவுகள் நிலவுகின்றபோது, பாதகமான சாதகமான தாக்கங்கள் ஏற்படுவதாகவும் கருத்து முன்வைக்கப்படுகின்றது[103]. எனவே இக்கருத்துக்கள் குடும்பத்தின் நலவாழ்வு திருப்திகரமான நிலமையில் அமைவதில், குடும்ப உறவுகளில் காணப்படுகின்ற சூழ்நிலைகள் செல்வாக்குச் செலுத்துகின்றமையைமுன்வைக்கின்றது.

---

[97] James.B. (2007). *Marriage: An Anthropological studies.* Washington: Pigen, pp 23-28

[98] Goffman E. (1959). *"Presentation of Self in Everyday Life".* - p47.

[99] Maslow. (2012). *A theory of Human Motivation.* Star publication, PP 117- 132

[100] Physical Illness in Gay, Lesbian, and Heterosexual Marriages: Gendered Dyadic Experiences.*Umberson D, Thomeer MB, Reczek C, Donnelly R.,J Health Soc Behav. 2016 Dec; 57(4):517-531*)

[101] (Hartwell S. W., & Benson P. R. (2007). Social integration: A conceptual overview and two case studies. In Avison W. R., McLeod J. D., & Pescosolido B. (Eds.), Mental health, social mirror (pp. 329-353). New York: Springer. doi:10.1007/978-0-387-36320-.)

[102] Liu H.,& Waite L. (2014). Bad marriage, broken heart?Age and gender differences in the link between marital quality and cardiovascular risks among older adults. Journal of Health and Social Behavior, 55, 403-423 doi:10.1177/0022146514556893

[103] Rook K. S. (2014). The health effects of negative social exchanges in later life. Generations, 38, 15-23. [Google Scholar]

முஸ்லிம் சமுதாயங்களில், நலவாழ்வில் திருமணம் தொடர்பான காரணிகள் செல்வாக்குச் செலுத்துவது தொடர்பாக ஆய்வுகள் பரந்தளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை, இருந்த போதிலும் முஸ்லிம் சமூகத்தில் குடும்பங்களின் சமூகப், பொருளாதார, உளவியல் நிலைகளைக் கண்டறிதல் தொடர்பான பங்களாதேஷில் மேற்கொண்ட "பணமாகச் சீதனம் பெற்ற குடும்பங்களின் திருமண வாழ்வு தொடர்பான"ஆய்வானது,சீதனம்வாங்கித் திருமணம் புரியும் குடும்பங்களைவிட, சீதனம் வாங்காது திருமணம் புரிகின்றகுடும்பங்களில் வன்முறைகள் குறைவாகவுள்ள நிலைமைகளையும், சீதனத்தின் அளவு அதிகரிக்கும் அளவு கொடுமைகளும் அதிகரிப்பதாகவும் குடும்ப நலவாழ்வு பாதிப்படைவதாகவும் முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளது[104] .

Reshma மற்றும் ஏனையோர்,கர்நாடகமாநிலத்தில் மேற்கொண்டஇச்சமூகவியல் ஆய்வானது,சீதனத்துடன் தொடர்புடையகுற்றங்கள் பற்றியும்,அதன் சமூக,கல்விரீதியானபாதிப்புக்கள் பற்றியும், குடும்பங்களின் நலவாழ்வுப் பாதிப்புப் பற்றியும் ஆராய்வதாகஅமைந்திருந்தது[105]. மேலும்,சமுதாயத்தில் சீதனம் தற்காலத்தில் பெற்றுள்ளபுதியவடிவங்கள்,சீதனநடைமுறைகளின் வழியாகசமூகத்தில் தோன்றியுள்ளபுதியஉளவியல்,பொருளாதார,சமூக,பண்பாட்டுத் தோற்றங்கள் பற்றியகண்டு பிடிப்புக்களைRao(1980), Ahuja(1982), Hooja(1989), Devi(1983), Anna Mathew போன்றவர்களின் ஆய்வுகள் முன்வைக்கின்றன.

**ஆய்வு மையம் (தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

**சமூகநிலை**

ஆழமான நேர்கானலின் (Indepth interview) போது ஆய்வுடன் தொடர்புடைய மாறிகள் கலந்துரையாடப்பட்டன.இக்கலந்துரையாடலின் ஊடாக நலவாழ்வு பற்றிய பல தகவல்கள் முன்வைக்கப்பட்டன. இங்கு நலவாழ்வில் பிரதான மாறியான சமூக அங்கீகாரமானது,குடும்ப அங்கீகாரம், சமூக அடையாளம் ஆகிய இரண்டு மாறிகளால் அளவீடு செய்யப்படுகின்றது.

சீதனம் பெறாது திருமணம் செய்த தம்பதியினரிடம் மேற்கொண்ட பேட்டியின்போது ˙ தமது சமூகநிலை தொடர்பாக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டவாறு கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

| சமூக அங்கீகாரம் | | | |
|---|---|---|---|
| **மாறிகள்** | **திருப்தி** | **ஓரளவு திருப்தி** | **திருப்தியின்மை** |
| குடும்ப அங்கீகாரம் | 5 | 6 | 14 |
| ஏனையோரின் அங்கீகாரம் | 13 | 10 | 2 |

இவர்களுள் அதிகமான தம்பதியினர்இஸ்லாமிய முறையில் திருமணம் புரிந்த காரணத்தினால் தமது குடும்பங்களின் அங்கீகாரத்தை இழந்து குடும்ப உறவுகளையும் பிரிந்துள்ளமையால் , அவர்களின் சமூக அங்கீகாரம் என்பது திருப்தியளிக்கக்கூடிய நிலையில் எளிதாகக் கிடைக்கவில்லை என்று குறிப்பிடுகின்றனர். இங்கு,குறிப்பாக, ஆணின் பெற்றோர் தமது மகன் திருமணம் புரிந்த காரணத்தினால் மகனையும் அவரது மனைவியையும்குடும்பத்தில் அங்கீகரிக்காதுள்ளமையை பலர் வெளிப்படுத்தியுள்ளனர். இத்தகையை குடும்பங்களை அவர்களது உறவினர்கள் தங்களது குடும்பங்களில் இடம்பெறும் முக்கியமான நிகழ்வுகளில் கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை என்பதனை

[104]Suran L: Amin S, HuqL: , Chowdury (2004), dowry and family wellbeing

[105]. M.A, Ramegowwda.A.(2013) ."Dowry- the Cancer of Society", journal of social Issues , Vol,3

அதிகளவிலானோர் வெளிப்படுத்தினர். குறிப்பாக தமது சகோதரர்களின், சகோதரிகளின் திருமண வைபவங்கள், பெற்றோரின் உடல் நலக் குறைவுகள், மரணம் போன்ற நிகழ்வுகளில் கலந்து கொள்ள அனுமதித்திருக்கவில்லை. இருப்பினும், குறிப்பிட்ட இஸ்லாமிய முறைப்படி திருமணம்புரிந்தவர்களஅவர்களின் குடும்ப நிகழ்வுகளுக்கு தங்களின் குடும்பங்களை அழைத்தாலும் அவற்றைக் குறிப்பிட்ட குடும்பங்கள் பொருட்படுத்துவதில்லைஎன்றும் குறிப்பிட்டனர். அதேபோல,. பெற்றோரின் குடும்பங்கள் அழைப்பு விடுக்காத போதும் அத்தகைய நிகழ்வுகளுக்கு தாங்கள் சென்றாலும் அவர்களைக் கண்டு கொள்வதுமில்லை என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு குடும்பங்களில் இடம்பெறும் இத்தகைய விடயங்களால் தாங்கள் பூரணமாக மகிழ்ச்சியடைய முடியாமலுள்ளதாக56% மானவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ‘‘சீதனம் பெறாமல் திருமணம் செய்த காரணத்திற்காகத் தங்களை குடும்பங்கள் அங்கீகரிக்காமையால் மனோரீதியான தாக்கத்திற்கு அடிக்கடி உள்ளாவதாக’’ பதிலளித்த ஒருவர் குறிப்பிடுகின்றார்.

மேலும் இதனுடன் தொடர்புடைய விடயம் தொடர்பாக பின்வருமாறு பதிலளித்தRaheemபின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*‘‘திருமணம் முடித்து 06 வருடங்கள் கடந்துள்ளன. எனது ஜெற்றோர் இன்னும் எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. நான் இஸ்லாமிய முறைப்படியே திருமணம் முடிப்பேன் என்பதனைப் பலதடவைகள் எனது பெற்றோருக்கு கூறியுள்ளேன். இருப்பினும் இவர்கள் அதனை அங்கீகரிக்கவில்லை. இதனால் நான் அவர்களின் சம்மதமின்றி திருமணம் புரிந்தேன். எனது மனைவியும் பிள்ளைகளும் நானும் சந்தோஷமாக இருக்கின்றோம்.எனது மனைவியின் குடும்பத்திலிருந்து எதுவித எதிர்ப்புகளும் இல்லை. இருப்பினும் எனது பெற்றோரின் இந்த நிலை எங்களுக்கு மனவருத்தத்தைத் தருகின்றது. எனது குடும்பத்தில் பல சந்தோசமான நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆனால் எங்களை அவர்கள் அழைக்கவில்லை. எனது சகோதரர் மிகக் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த போது நாங்கள் சென்றோம். ஆனால் யாரும் எங்களுடன் பேசவில்லை. எங்களை ஒதுக்கிவைத்ததன் காரணமாக எனது பெற்றோரின் ஏனைய குடும்பத்தினர் எங்களுடன் தொடர்பு கொள்வதனைத் தவிர்த்து வருகின்றனர்.உறவுகளைப் பிரிந்து வாழ்வது மிகவும் கடினமானது. ……’’*

*இக்கருத்தின்படி பார்ககும் போது, குடும்ப அங்கீகாரம் என்பது பெரும்பாலானவர்களுக்கு கிடைப்பதில் குடும்பங்களின் ஏற்றுக் கொள்ளும் நடத்தைகள் பாரிய சவால்களாக அமைந்துள்ளமையை அடையாளப்படுத்த முடிகின்றது. இத்தகைய நடத்தைகள் அவர்கள் குடும்பத்தடன் சந்தோசமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அடிக்கடி செல்வாக்குச் செலுத்துகின்றதனை வெளிப்படுத்துகின்றது. இங்குகுடும்பத்தின் அங்கீகாரமானது, வலுவற்றதாக அமைகின்றபோது, குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் உளப்பாங்குகள் நெருக்கீட்டுக்கு உட்படுவதாகவும், இது நலவாழ்வில் எதிர்மறையான செல்வாக்கைச் செலுத்துவதாகவும் தோமஸ் குறிப்பிடுகின்றார்[106]. எனவே குடும்ப அங்கீகாரமின்மை என்பது இக்குறிப்பிட்ட குடும்பங்களின் நலவாழ்வில் செல்வாக்குச் செலுத்துகின்றதனை விளங்கிக் கொள்ள முடிகின்றது.*

இருப்பினும் சிலகுடும்பங்கள் குடும்ப அங்கீகாரம் தொடர்பாக ஓரளவு திருப்தியையும் அடைந்துள்ளதனையும் ஆய்வு முன்வைக்கின்றது.

இது பற்றி ஒருவர் குறிப்பிடுகையில்,

*…..’’எனது மனைவியின் தரப்பில் என்னில் ஒரு சில விருப்பமின்மைகள் ஆரம்பத்தில் நிலவி வந்தன.அவை சில நாட்களில் மறைந்து எங்களை ஏற்றுக் கொண்டனர். ஆனால் எனது*

[106]Marital Quality and Cognitive Limitations in Late Life.(2016), *Xu M, Thomas PA, Umberson DJ Gerontol B Psychol Sci Soc Sci. 2016 Jan; 71(1):165-76)*

*பெற்றோர்கள் மூன்று வருடங்களின் பின்னரே என்னையும் எனது பிள்ளையையும் ஏற்றுக் கொண்டனர். இருப்பினும் எனது மனைவியை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனை நடக்கின்ற சம்பவங்கள் வழியாக என்னால் அறிய முடிகின்றது. இவை எனக்கும் எனது மனைவிக்கும் வருத்தமளிக்கின்றன. முன்னரைவிட,தற்போது ஓரளவு குடும்பங்களில் சந்தோசம் நிலவுகின்றமையை உணரமுடிகின்றது. அதனால் மனதுக்கு நிம்மதி கிடைக்கின்றது. காலம்தான் சிலதை சரிப்படுத்தும்".*

28%மானோர்,குறிப்பிட்ட காலத்தின் பின்னர் தமது குடும்பத்தை ஏற்றுக் கொண்டமையால் குடும்பங்களில் சந்தோசம் ஏற்பட்டுள்ளது எனத் தமது கருத்தை வெளிப்படுத்தினர். குடும்பத்தில் காணப்படுகின்ற ஏனைய உறவினரின் தொடர்புகள் சாதகமானதாக அமையும் போது அது குடும்ப நலவாழ்வினை பலப்படுத்துவதாக அமைகின்றது என Benson சுட்டிக்காட்டியுள்ளார்( Hartwell S. W.,& Benson P. R. (2007).இத்தகைய காரணியானது இக்குடும்பங்களிலும் செல்வாக்குப் பெறுகின்றமையை கருத்துக்கள் வெளிப்படுத்தியுள்ளன.

*எனவே,*இவ்வாய்வில், 84% மான குடும்பங்கள் (தம்பதியினர்) தமது குடும்ப ரீதியான அங்கீகாரத்தைப் பெறவில்லயையாயனும், 26% மானவர்களின் கருத்துக்கள் குடும்ப அங்கீகாரம் சிறிது காலத்தின் பின்னர் கிடைத்துள்ளமையை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு பெரும்பாலானவர்களுக்கு இந்த அங்கீகாரம் கிடைக்காமைக்குப் பிரதான காரணம் ஆணின் பெற்றோர்களின் அங்கீகாரம் முதலில் கிடைக்கப்பெறாமையாகக்காணப்படுகின்றது. ஆணின் பெற்றோர்கள இவ்வங்கீகாரத்தை ஏற்றுக் கொள்ளாமையால்,ஏனைய உறவினர்களும் இவ்விடயத்தைக் காரணமாக முன்வைத்து, குறிப்பிட்ட குடும்பத்துடன் தொடர்பினை ஏற்படுத்துவதனைத் தவிர்த்து வந்துள்ளமையையால் குடும்பங்கள் அங்கீகரிக்கும் தன்மை குறைவாக இருந்தமையால் அவர்களின் மனோரீதியான சந்தோசம் பாதிப்படைந்துள்ளமையை ஆய்வு வெளிப்படுத்துகின்றது. எனவே இவ்விடயங்களை ஆய்வு முடிவுகளுடன் ஒப்பிடும் போதும் இத்தகைய குடும்ப அங்கீகாரம் தொடர்பான நடத்தைகளானது, குறிப்பிட்ட ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களின் குடும்பத்தில் காணப்பட்ட சந்தோசம், நிம்மதி ஆகிய நலன்களில் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையை வெளிப்படுத்துகின்றது.

பெரும்பாலான குடும்பங்களுக்கு ஏனையவர்கள் வழியாகத் தங்களுக்கக் கிடைக்கின்ற மதிப்பம், மரியாதையும், ஆதரவும் பல்வேறு வடிவங்களில் கிடைப்பதாக அதிகமானவர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தகைய சூல்நிலைகளானது, அவர்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் வழங்குவதாகக் குறிப்பிடுகின்றனர். எப்படி இருப்பினும், அவர்களில் பலர் கருத்துத் தெரிவிக்கும் போது, அவர்கள் இத்தகைய அடையாளங்களைப் பெறுவதில் பல்வேறு சவால்களைத் திருமணத்தின் பின்னர் எதிர்கொண்டதாகவும், அதனைப் பேணுவதிலும் பராமரிப்பதிலும் பல தடைகளையும் அனுபவித்ததாகவும் குறிப்பிடுகின்றனர்.

உதாரணமாக முஹம்மட் என்பவர் தனது சமூக அடையாளம் தொடர்பாக *விளக்கும்போது,*

*"எனது மனைவியை எதுவும் பெறாமல் திருமணம் முடிக்க முன்வந்தபோது என்னைப் பற்றி பெண் தரப்பினரும், நண்பர்களும் சந்தேகத்துடன் பார்த்தனர். அப்போது என்னைப் பற்றி நிரூபிக்கவேண்டி ஏற்பட்டது. இதற்காகப் பல மாதங்கள் துன்பங்களை அனுபவிக்க வேண்டி இருந்தது. திருமணம் புரிந்து சுமார் 06, 07 மாதங்கள் வரை சோதனை தொடர்ந்து இருந்தது. சிலவேளை இப்பைத்தியக்காரத்தனத்தை நினைத்துப் பரிதாபப்படுவதா, கோபப்படுவதா என்று தெரியாமலும் இருந்தது. இருப்பினும் எனது முயற்சியாலும், பொறுமையாலும் பெண்தரப்பு, நண்பர்கள், அயலவர்களின் நம்பிக்கைக்கு உரியவனாக மாறத் தொடங்கினேன். இதற்கு ஒரு வருடம் எனக்கு எடுத்தது, தற்போது என்னை அவர்களில் ஒருவராக ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆதன்பின்னர்தான எனக்கும் மனநிம்மதியும், சந்தொசமும் ஏற்பட்டது. .....".*

*திருமணத்திற்காகப் பெண்ணிடம் எதுவும் வாங்காமல் திருமணம் முடிக்க முன்வந்தால் குறிப்பிட்ட நபர்பற்றி பெண்தரப்பினர் தப்பபிப்பிராயங்களை முன்வைப்பதும், குறைகளைக் கண்டுபிடிப்பதும் சமூக வழமையாகக் காணப்படுகின்றது. இவ்வகையில் ஆண் நோயுற்றவனா?, ஏதும் உளவியல் பிரச்சினையுடையவரா? என நோக்குகின்ற நிலைமைகள் இம்மக்களிடையே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் சமூகத்தில் சீதனம் வலிமை பெற்றுள்ள விதம் என பலர் குறிப்பிடுகின்றனர்.*

இதே போல மற்றொரு household விளக்கும் போது. தனது சமூக அடையாளம் திருமணத்திற்கு முன்னரை விட தற்போது திருப்திகரமானதாக உள்ளதாகவும் குறிப்பிடுகின்றார்.

*“ நான் இஸ்லாமிய முறைப்படி திருமணம் புரிந்து எனது மனைவியுடன் ஒரு வாடகை வீட்டிலேயே சுமார் 05 வருடங்கள் வாழ்ந்தோம். எங்களைச் சுற்றியிருந்தவர்கள் எங்களுக்கான மரியாதையைத் தந்தனர். சிலர் நேரடியாகவே நல்ல விடயம் ஒன்றைச் செய்ததாகப் பாராட்டினர். எங்களுடன் மரியாதை கலந்த இடைவினைகளை மேற்கொண்டனர். எனது மனைவியின் குடும்பத்தினரும்,நண்பர்களும் அவ்வாறே எங்களைக் கௌரவித்தனர். ஆதனால் எங்களுக்கு மகிழ்ச்சியும் ஆறுதலும் கிடைத்து வந்தது, எங்களது வாழ்க்கைக்கு இது பெரும் பலமாகவும் அமைந்தது.”*

இருந்தாலும் சிலகுடும்பத்தினருக்கு மேற்குறிப்பிட்ட அங்கீகாரங்கள் கிடைக்காமையால் வாழ்வில் தொடர்ந்தும் நிம்மதியற்ற நிலையினையும், கஸ்டங்களையும் எதிர்கொள்வதாகக் குறிப்பிடுகின்றனர்.

இதுபற்றி பதிலளித்வர் குறிப்பிடும்போது,

*“நாம் திருமணம் புரிந்து ஒரு வாடகை வீட்டில் வாழ்ந்து வந்தோம். சீதனம் இன்றி திருமணம் புரிந்தமையால் எனது பெற்றோர்கள் எங்களை ஒதுக்கிவைத்தனர். இவர்களுக்கும் எங்களுக்கும் இடையில் நல்ல உறவு இருக்கவில்லை. அவர்கள் கோபத்தால் என்னைப் பற்றிப் பிழையான புரிதல்களை ஏனையவர்களிடம் கூறிவந்தனர். எனது நண்பர்களில் சிலரும் அதனை நம்பினர். எனது மனைவியின் தரப்பிலும் சிலர் இக்கருத்துக்களை ஏற்றுக் கொண்டனர். இதனால் ஏனையவர்கள்எங்களை கேள்வியுடன் பார்க்கத் தொடங்கினர்.இதனால் நான் பலருடனான உறவுகளைத் துண்டித்து விட்டேன். அடிப்படையில் நான் அதிகம் பேசமாட்டேன்.அதேபோல எனது மனைவியும் அதிகமாகப் பேசுபவரல்ல. இதனால் எங்களைச் சுற்றியுள்ளவர்களும், உறவினர்களும் எங்களுடன் தொடர்புகளை குறைத்துவிட்டனர். இது எங்களுக்கு மிகுந்த மனவேதனையைத் தருகின்றது. மனைவியும், நானும் பிள்ளைகளும் சந்தோசமாக இருக்கும்போதெல்லாம் இவற்றைப் பகிர்ந்து கொள்ள உறவினர்கள் இல்லையே என்ற கவலை எங்களை வாட்டுகின்றது……*

எனவே மேற்குறிப்பிட்ட பதிலளித்தவர்களின் கருத்துக்களானது, இஸ்லாமிய முறையில் திருமணம் புரிந்தமையால் தப்பபிப்பிராயங்களையும், பிழையான புரிதல்களையும் தம்மைச் சூழ்ந்துள்ளவர்கள் மத்தியில் எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுவதற்கும் இதனால் உறவனர்களின் தொடர்புகள் துண்டிக்கப்படுவதற்கும் காரணமாகியுள்ளது. இத்தகைய நிலைமை அவர்களின் குடும்ப வாழ்வில் சந்தோசங்களில் பாரியளவில்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதனை வெளிப்படுத்துகின்றது.

இங்கு, ஒப்பீட்டு ரீதியில் பார்க்கும் போது அதிகமான householdகளுக்கு அவர்களைச் சுற்றியுள்ள குடும்பங்களும், உறவினர்கள், அயலவர்கள் ஆகியோர் சமூக அங்கீகாரத்தை குறைந்தளவில் வழங்கியமையால் அது அவர்களின் நலவாழ்வில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, அதேவேளை 26% மானவர்களுக்கு கிடைத்த சிறந்த அங்கீகாரமானது

அவர்களின் நலவாழ்வில் மகிழ்சிகரமான செல்வாக்கைச் செலுத்தியுள்ளது என்பதனை இவ்வாய்வுவழியாகக் கண்டறிய முடிகின்றது.

**பொருளாதாரத் தாக்கங்கள்**

இவ்வாய்வில் மற்றுமொரு விடயமாக பொருளாதார நிலையில் நலவாழ்வு முக்கியம் பெறுகின்றது. ஆய்வில் பங்குகொண்டவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஆழமான கலந்தரையாடலில், பின்வரும் வகையில் அவர்களின் பொருளாதார நிலைமைகள் இருப்பதனை அவதானிக்க முடிந்தது.

| பொருளாதார நிலையும், நலவாழ்வும் | | | |
|---|---|---|---|
| **மாறிகள்** | **திருப்தி** | **ஓரளவு திருப்தி** | **திருப்பியின்மை** |
| தொழிலும் - வருமானமும் | 6 | 10 | 09 |
| பொருளாதாரத் திருப்தியும் சந்தோசமும் | 5 | 09 | 11 |

இந்த ஆய்விலே கலந்துகொண்ட எல்லா household னரிடையே காணப்படும் பொதுவான அம்சமாக,24% மானவர்களே பொருளாதார திருப்தியை அடைந்தவர்களாகவும்,36% மானவர்கள் முழுமையான பொருளாதார நிலையில் திருப்தியற்றவர்களாகவும்,40% மானவர்கள் ஓரளவு திருப்திநிலையில் இருப்பதனையும் அடையாளங்காண முடிந்தது. மேலும் அத்தகைய பொருளாதார நிலைமைகள் அவர்களின் வாழ்க்கையில் திருப்தியையும் சந்தோசத்தையும் பெற்றுக் கொள்வதிலும் தாக்கம் செலுத்தியுள்ளது எனலாம்.

இவர்களின் தொழில் மற்றும் வருமான நிலைமைகள் எவ்வாறு அவர்களின் நலவாழ்வில் செல்வாக்குப் பெறுகின்றது என்பது பற்றி ஆராயும் போது, இவை பின்வருமாறுஅமைந்திருந்தன. 25 குடும்பங்களில்,04 குடும்பங்களைத் தவிர ஏனைய குடும்பங்கள் தற்காலிக தொழில்களையும்,இவற்றில் அதிகமான நேரத்தைச் செலவு செயகின்றமையையும் அவதானிகக முடிகின்றது. இவர்கள் மாதாந்தம் சுமார் ரூபா 20,000.00 - ரூபா 40,000.00 வரையிலான வருமானங்களை ஈட்டுகின்றனர். இங்கு விஷேடமாகப், பெரும்பாலான பெண்கள் 11 பேர், கணவனின் தொழிலில் பங்கெடுப்பவர்களாகவும் இருக்கின்றனர். இருப்பினும் அத்தகைய நிலையற்ற தொழில்களால் அடிப்படைத் தேவைகளைப் பூரணமாகத் தமது குடும்பத்திற்கு வழங்குவதில் பல தடைகளை எதிர்கொள்வதாகவும், இதனால் பூரணமான மகிழச்சியை குடும்பத்தில் அடைவது கடினமாயுள்ளதாகவும், அதிகமான நேரத்தை உழைப்பதற்குச் செலவிடுவதனால் குடும்பத்திற்கு அதிக நேரத்தைச் செலவிட முடியாதுள்ளதாகவும் 76% மானவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இது பற்றி ஸல்மா குறிப்பிடும் போது,

*....''எனது கணவரின் வருமானம் நிரந்தரமற்றதுதான். இருப்பினும் மாதாந்தம் சாதாரணமாக ரூபா 30,000.00 ஆயிரம் வருமானமாக உழைக்கின்றார். அது எமது குடும்பத்தின் நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானதுதான். இருப்பினும், எங்களுக்கென்று சொந்தமான வீடு இல்லை. வாடகை வீட்டில்தான் 04 வருடமாக வாழ்ந்து வருகின்றோம். அப்படியிருந்தும் உழைப்பில் ரூபா 15,000 ஆயிரத்தை மாதாந்தம் சேமித்து அதனைக் கொண்டு ஒரு வீட்டைக் கட்ட ஆரம்பித்துள்ளோம். இதனால் ஏனைய தேவைகளைப் பூரணமாக்குவதில் சிக்கல்கள் உள்ளன. இதனால் அன்றாடம் மனக்கவலைக்கு உள்ளாகின்றோம்''*

மற்றுமொரு householdஇதே கருத்தை வெளிப்படுத்தினார்.

'*நான் திருமணம் புரியும் முன்னர் சிறு சிறு வியாபாரங்களை மேற்கொண்டிருந்தேன். திருமணத்தின் பின்னர் நண்பர்களின் உதவியுடன் வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தேன். எனது பெற்றோர்கள் எனக்கு எதுவித சொத்து ஆதாரங்களையும் தரவில்லை. இதனால் எனது குடும்பத்திற்காகக் கடினமாக உழைக்கவேண்டி ஏற்பட்டது. இவற்றைக் கொண்டு குடும்பத்திற்குத் தேவையான சகல தேவைகளையும் நிறைவு செய்ய முடியாதுள்ளது.காரணம் எல்லாவற்றையும் விட சிறு வீடாவது சொந்தமாகத் தேவைப்படுகின்றது. தற்போது நாங்கள் உறவினர் ஒருவரின் வீட்டில் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றோம். அதிலிருந்து கொண்டே வீட்டை நிர்மாணித்து வருகின்றோம். மூன்று வருடமாக வீடுகட்டும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன. தொழிலில் நன்றாகக் காலூன்றிய பின்னரே வீட்டு வேலையை ஆரம்பித்தோம். இன்னும் இரண்டு மூன்று வருடங்களின் பின்னர்தான் எங்களுக்குப் பொருளாதாரம் சேமிப்பாக இருக்கும். அதுவரை நாளாந்தம் பலசிக்கல்களும் சவால்களும்தான் உருவாகின்றன. இதனால் மகிழ்வாக இருக்கும் பல சந்தர்ப்பங்கள் கவலைக்குரியதாக மாறியுள்ளது''.*

மேலும் தொழில் பற்றி கலீம் தனது அனுபவங்களை விளக்கும் போது,

*… தற்போது நாங்கள் அடிப்படை வசதிகளற்ற முழுமையாக இல்லாவிடினும் ஓரளவு வசதியுள்ள வீட்டில் வாழ்ந்து வருகின்றோம். நான் ஆடைத் தொழில் நிறுவனம் ஒன்றில் வேலை புரிகின்றேன். கிடைக்கும் வருமானம் மாதாந்தச் செலவுகளுக்கே போதுமானதாயுள்ளது. எனது மனைவி வீட்டில் உணவுப் பொருட்களைப் பொதி செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார். இவற்றை மாலை நேரங்களில் கடைகளுக்கு விநியோகித்து வருகின்றேன். ஓய்வின்றி உழைக்கவேண்டியுள்ளது.*தொடர்ச்சியாகத் தொழில் புரிவதனால் அலுப்பும் களைப்பும், சிலவேளை இவற்றை எண்ணி அழுகையும் வருவதுண்டு''

இங்கு அதிகமான குடும்பங்கள் பொருளாதார நிலையில் தமது நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பலத்தைப் பெற்றிருக்கின்றனர். இவர்களின் வருமானமும் குடுமபத்தைப் பாராமரிக்கப் போதுமானதாக இருக்கின்றது. இருந்தாலும், அவற்றில் சந்தோசம் காண்பதில் பல்வேறு தடைகள்காணப்படுகின்றன. குறிப்பாக இவர்களுக்கு அடிப்படையான வீடு என்பது பாரிய சவாலாக இங்கு காணப்படுகின்றது. இதனால் நாளாந்தம் மனக் கவலைகளுக்குமுகங்கொடுக்கின்றமை அதிகமானவர்களால் வெளிப்படுத்தப்படுகின்றது.

இருப்பினும் பொருளாதார பலத்தைக் கொணடுள்ள குடும்பங்களில் மகிழ்ச்சியும்,அமைதியும், காணப்படுவதனையும் காணலாம்.

இது தொடர்பாக மற்றுமொருhouseholdகூறும்போது,

*"''திருமணத்தின் முன்னர் பத்து வருடமாக சிறு வியாபார முயற்சியில் ஈடுபட்டு திருப்தியான பொருளாதார நிலையினைக் கொண்டிருந்தேன். இதனால் திருமணத்தின் பின்னர், குடும்பத்தில் வருமானக் குறைபாடுகள் ஏற்படவில்லை. இதனால் எங்களது குடும்பத்தில் சந்தோசம், நிம்மதி என்பன காணப்படுகின்றன.*

இதேகருத்துப் புலப்பட சர்மிளாவும் விளக்குகின்றார்.

''*எனது கணவரின் பெற்றோர்கள் அவருக்கான சொத்துப் பங்கினை வழங்கியிருந்தனர். இதே நேரம் சாதாரண வருமானத்தில் ஒரு நிறுவனத்தில் கடமை புரிந்தும் வருகின்றார்.இதனால் எங்களது வாழ்வில் வருமானம் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. இந்த வருமானத்தையும், சொத்துக்களையும் கொண்டு எங்களுக்கான அழகிய ஒரு வீட்டையும் கட்டிமுடித்து அதில் தற்போது பிரச்சினைகள் எதுவுமில்லாமல் சந்தோசமாக வாழ்ந்து வருகின்றோம்.''*

மேற்குறித்த கருத்துக்களின் படி,அவதானிக்கும் போது பொருளாதாரத்தில் ஓரளவு சிறந்த மற்றும் திருப்தியான வருமானத்தைக் கொண்டுள்ள குடும்பங்கள் சந்தோசமான சூழ்நிலைகளுக்குக் காரணமாக இருக்கின்றமையை வெளிப்படுத்துகின்றது.

இவ்வாய்வானது குடும்பங்களின் நல்வாழ்வு நிலையில் அதிகமான குடும்பங்கள் நல்வாழ்வினை அடையவில்லை என்பதனை முன்வைக்கின்றன. குறிப்பாக பொருள்சார் நிலையில் நல்நிலையினை அடைதல், பொருட்களின் நுகர்வு,கல்வி, சுகாதாரம், சிறந்த சேவைகள் போன்றவற்றினைப் பூரணமாகப் பெரும்பாலான குடும்பங்கள் அடைந்து கொள்ளவில்லை. இதற்குப் பல்வேறு பின்புலங்களை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

"*…. எனது குடும்பத்தில் எங்களது அனைத்து நலன்களையும் அடைந்துகொள்ள நாங்கள் முடியுமானவரை முயற்சி செய்கின்றோம். அதிலும் குறிப்பாகப் பிள்ளைகளிகன் கல்வி, சுகாதார நிலமைகளில் எவ்விதக் குறையும் வராதவகையில் பேணி வருகின்றோம். ஆனால் ஏனைய வீட்டுப் பொருட்களை ஏனைய வீடுகளில் உள்ளது போல நுகர்வதற்கான வசதிகளும்,வாய்ப்புக்களும் குறைவாகவே இருக்கின்றது. அதற்கு குறைந்த வருமானத்திற்குள் வாழும் எங்களது நிலமை காரணமாயுள்ளது*".[107]

அதனுடன் சார்ந்த விளக்கத்தை Waseema குறிப்பிடும் போது,

*"நானும் எனது கணவரும் இணைந்து பிள்ளைகளின் நல்வாழ்விற்காக அதிகளவில் முயற்சிகளை எடுத்து வருகின்றோம். கல்விக்கான செலவுகளைத் தாராளமாகச் செய்கின்றோம். ஏனெனில் எங்களைப் போல எமது பிள்ளைகள் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக. இவை தவிர ஏனைய பொருட்களை நுகரும் விடயத்தில் எல்லாவற்றையும் முழுமையாக நிறைவேற்ற எங்களது பொருளாதாரம் இடமளிக்கவில்லை….."*

மற்றுமொருhousehold பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"*வீட்டுப் பொருட்கள் அனைத்தையும் பூரணமாகத் தேடி எங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பலமில்லாவிடினும், ஓரளவு சாதாரண பொருட்களை நுகரும் அளவிற்கு எங்களது நிலை காணப்படுகின்றது. கிடைக்கின்ற வருமானத்தில் எல்லாவற்றையும் பேணுவது மிக்க கடினமாயுள்ளது. கணவரின் குடும்ப ஆதரவு இல்லாமலுள்ளமையும் இதற்கு ஒரு காரணமாகும். சொத்துக்களில் இஸ்லாம் சொன்னபடி பங்குகள் வழங்கப்படுமாயின் எங்களுக்கு உழைப்பதில் சேமிக்கவும் முடியும். சிறந்த நுகர்வினை மேற்கொள்ளவும் முடியும்…*" [108].

அதே சமயம், சில householdகள் தமது குடும்பங்கள் பிள்ளைகளின் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் முக்கியத்துவம் வழங்கும் அதேநேரம் ஓரளவிற்குத் தங்களது வீடு சார்ந்த பொருட்களையும் இடைக்கிடையே கொள்வனவு செய்து வருகின்றனர். இருப்பினும் அது முழுமையான நல்வாழ்வு அம்சங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றனர்.

"*குடும்பத்தின் அனைத்துத் தேவைகளையும் ஒரே தடவையில் நிறைவு செய்யும் பொருளாதார பலமின்மையால் நாங்கள் எங்களது குடும்பத்தின் தேவைகளில் முக்கியமானதை முதன்மைப்படுத்தி அதை நிறைவு செய்து வருகின்றோம். இருப்பினும் பிள்ளைகளின் நலத்தில் கல்வியிலும், ஆரோக்கியத்திலும் முதல்நிலை அக்கறை கொள்கின்றோம். இந்த அடிப்படையில் சிலவேளைகளில் செலவுகளைக் கவனத்தில் கொள்ளாது பொருட்களை நுகரவேண்டியுமுள்ளது* "

---

[107]Rahmathullah (2016, 05 17). (Researcher, Interviewer)

[108]Fasmina.F (2016, 05 17). (Researcher, Interviewer)

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாகப் பதிலளித்தவர்களின் கருத்துக்களை அவதானிக்கும் போது, 24% மானவர்கள் திருப்தியளிக்கும் பொருளாதார நிலைமைகளைக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய நிலையானது அவரகளின் குடும்பத்தில் சந்தோசமான நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை 74% மானவர்களின் நிலையற்ற பொருளாதாரம், முதலீடற்ற நிலை, நிலையான வருமானத்தை வழங்கும் வழிகள் இன்மை காரணமாக திருப்தியற்ற பொருளாதார சூழ்நிலை நிலவுவதனையும், இது அவரகளின் குடும்ப சந்தோசத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.

மூன்றாம் உலக நாடுகளில் பொருளாதார வலுவற்ற குடும்பங்களில் அடிப்படைத் தேவைகளைப் பூரணமாக நிறைவு செய்ய முடியாத நிலைகள் அதிகமாகக் காணப்படுகின்றது. இது குடும்பத்தில் பிள்ளைகளின் கல்வியையும், சுகாதாரத்தையும் அதிகளவில் பாதிக்கும் காரணியாகவும், மற்றும் அவர்களின் நலவாழ்வில் குறைபாடுகளை ஏற்படுத்தும் காரணியாகவும் இருக்கின்றது[109].

மேலும் குடும்பத்தில் காணப்படும் பொருளாதாரசூழ்நிலைகள் அவர்களின் குடும்ப உள ஆரோக்கியத்திலும்,மற்றும்,குடும்ப ஏனையவர்களுடன் மேற்கொள்கின்ற தொடர்புகளிலும் பாதிப்பை ஏற்படுத்தவதாக ஜியான் குறிப்பிடுகின்றார்.[110]மேலும்,லயர்ட்ன் ஆய்வானது குடும்பத்தில் நிலவுகின்ற மகிழ்ச்சியில், அக்குடும்பத்தின் வருமானம் பிரதான இடத்தை வகிப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றார். அத்துடன் குடும்பத்த்தில் நலவாழ்வு ஒன்றை உருவாக்குவதில் உறவுகளும், அவற்றிற்கு இடையில் நிலவுகின்ற தொடர்பாடலும் பிரதானமாகக் காணப்பட்டாலும்கூட,அக்குடும்பம் ஈட்டுகின்ற வருமானத்தின் அளவு, குடும்பத்திற்காக அதன் உறுப்பினர்கள் செலவிடுகின்ற நேரமும் மற்றுமொரு பிரதான செல்வாக்கைச் செலத்துகின்றது என தனது களஆய்வின் முடிவினை முன்வைக்கின்றார்[111]

**ஆய்வு முடிவு**

குடும்பங்களின் நலவாழ்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டஇவ்வாய்வில்,பிரதானமாகபெரும்பாலான குடும்பங்கள் சமூக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இத்தகைய சவால்கள் குறிப்பிட்ட குடும்பங்களின் பெற்றோர்களின் ஒதுக்கம்,உறவினர்களின் தொடர்பாடல்கள் துண்டிப்பு, அயலவர்களின் அங்கீகாரமின்மை போன்றனவற்றால் ஏற்படுத்தப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலைகளால் குறிப்பிட்ட குடும்பங்களின் வாழ்வில் மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்துவதில் அடிக்கடி தடைகள் ஏற்பட்டுவருகின்றன. இருப்பினும் சமூக அங்கீகாரத்தைப பெற்றுள்ள குடும்பங்களில் இத்தகைய மகிழ்ச்சிகரமான சூழ்நிலைகள் அதிகளவில் நிலவுவதனையும் இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

அதேபோல், 70% மான குடும்பங்களில் நிலவுகின்ற வருமான நிலைமைகள் அவர்களின் நலவாழ்வில் நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றது. குறிப்பாக, போதுமான வருமானமின்மை தொடர்ச்சியான வருமானத்திற்காக உழைத்தல், அடிப்படைத் தேவையான வீடமைப்பதற்கு அதிகளவான வருமானத்தைச் செலவிடுதல், இத்தகைய அதிக வருமானத்தை ஈட்டுவதற்காக அதிக நேரத்தைச் செலவிடுதல் போன்ற காரணங்களால் குடும்பத்தில் நலவாழ்வு அடிக்கடி பாதிக்கப்படுவதனைமற்றுமொரு விடயமாக இவ்வாய்வு முன்வைக்கின்றது. இருப்பினும் மறுபுறம் 30% மான குடும்பங்களில் காணப்படுகின்ற பலமான பொருளாதாரப் பிண்ணணியானது மகிழ்சிசகரமான குடும்ப வாழ்க்கையினை

[109]*World Impact Masure Academy*.(2018). *Annual Report* , Washington, pp 12-19

[110] Jing Jian Xiao, Familiy Economic Wellbeing (2018), Research Gate,: https://www.researchgate.net/publication/319244519

[111]

மேற்கொள்ளவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையையும் இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

**பரிந்துரைகள்**

இஸ்லாமியத் திருமண விதிகள் தொடர்பாக குடும்ப மட்டங்களில் விழிப்பூட்டல் நிகழ்வுகள் நடாத்தப்படல் வேண்டும்.

- ✓ இத்தகைய திருமண நடைமுறைகளைப் பின்பற்றுவோருக்கு சமய நலன்புரி நிறுவனங்கள் பொருளாதார வலுவூட்டல் திட்டங்களை முன்னெடுப்பதனூடாக இந்நடைமுறையினை மேலும் ஊக்கப்படுத்த முடியும்.
- ✓ ஆண்களுக்கு வழங்கப்பட வேண்டிய சொந்துப் பங்கீடு உரிய முறையில் கையாளப்படல் வேண்டும்.

References

Al quraan

Al Hadeeth

அபுல் ஹஸன்.எம்.கே.ஈ. (1971) **இஸ்லாத்தில் சீதனம் (கைக்கூலி) அனுமதிக்கப்பட்டதா?.** கொழும்பு.

Agarwal, B., *Social security and the Family, Journal of Peasent studies*, Vol.17, No.3.

Badawei, J. A. (1998). *Marriage in Islamic Law.* World islamic institution.

Easter Lins R.A., (2008).*Life cycle happiness and Its source*,Oxford :Oxford University pres.

Goffman, E. (1959). *"Presentation of Self in Everyday Life"..*

Hassim, I. (2016, 05 17). *Marriage in Muslim Society* . (Researcher, Interviewer)

Helean.Z. (2014). *self identity : Marriage and Widohood. Sociological studies.*

Hassana.S.I. (2015). *Gender Eqity and Equality.* Colombo: International development for journalist foundation.

Helliwell J. and Putnam R., (2004).The Social Context of Wellbeing. In Huppert, F, Baylis, N and B Keverne (eds.) (2005) The Science of Wellbeing. Oxford: Oxford University Press.

Jamal.S. (2017, 05 12). *Marriage* . (Researcher, Interviewer)

James.B. (2007). *Marriage: An Anthropological studies.* Washington: Pigen.

Janaki, R. (1977). *Marriage based Economy. Economic review*.

Khanema.a, et.al., (2006), development in the meshement of wellbeing, journal of economic press

Knight and Gunatilaka,(2007), great expectation? The subjective wellbeing of rural community, Department of Economy, Oxford :Oxford University pres.

Keyes, C. (1998). Social Wellbeing.Social Psychology Quarterly.V 61, no 2.

Layard, R. (2005). Happiness: lessons from a new science. London: Allen Lane

Maslow. (2012). *A theory of Human Motivation.* Star publication.

Naseeha.A.l. (2016). *Dowry and social effects.* Colombo.

Rinosa.A. (2016). *Muslim Marrage in Ampara district. 3rd International* symposium. Oluvil: South Eastern University Of Srilanka.

Rinosa.M.S. (2013). *Dowry system in Ampara District.* B.A Thesis .

Salma.M.I.M. (2016, 08 21). *marriage inMuslim Society*.

Sorokin,(2000), Introduction to sociology, Penguin press

Thaahir. (2016, 08 05). *Marriage in Islam*.

*World Impact Masure Academy*.(2018). *Annual Report* , Washington.

செய்னுதீன்.எஸ்.பரீத், (1998) **சீதனம்**.ஹெம்மாதகம: அல்புர்கான் வெளியீட்டுப் பணியகம்.